பக்கங்கள்:-25

காலை முரசு

## அவசரகாலச் சட்டம் மேலும் இரு மாதங்களுக்கு நீடிப்பு?



இலங்கையில் அவசர காலச் சட்டம் குறைந்தது இன்னும் 2 மாதங்களுக் காவது அமுல்படுத்தப்பட வேண்டும் என்று பொதுமக் கள் பாதுகாப்பு 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 21 | புதன்கிழமை | 07.01.2026 | அதிர்வு 160

# தமிழ் மக்களுக்கு நீதியையும் நிரந்தர தீர்வையும் வழங்குக!

## நாடாளுமன்றில் அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி. இடித்துரைப்பு





தமிழ் மக்களுக்கு நீதியையும், நிலையான அரசியல் தீர்வையும் வழங்குவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசு முன்வர வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06

## வாள், போதை மாத்திரைகளுடன் யாழில் 4 இளைஞர்கள் சிக்கினர்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் நேற்று நடத்திய சோதனை நடவடிக்கைகளின்போது 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒரு வாள், 4 கையடக்கத் தொலைபேசிகள், ஒரு மோட்டார் சைக்கிள், 860 போதை மாத்திரைகள் என்பன அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

24 தொடக்கம் 28 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் ஹரிணிக்கு எதிராக பிரேரணை



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முடிவு 06





அரசியலில் ஒரு தந்திரம் இருக்கின்றது. ஒரு விவகாரத்தில் அரசியல் ரீதியான முடிவை அல்லது தீர்க்கமான தீர்மானத்தை எடுக்காமல் விடயத்தை இழுத்தடிப்பது என்றால் அந்த விவகாரத்தை ஆராய்வதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமித்து விடுவதே அந்த யுக்தியாகும்.

அது போன்றதே நாடாளுமன்றத்தில் ஒரு விவகாரத்தை முடிவெடுக்காமல் நீண்ட காலம் இழுத்தடிப்பதாயின் அந்த விவகாரத்தை ஆராய நாடாளுமன்றத் தேர்வு குழு ஒன்றை நியமித்து விடுவது ஆகும்.

இப்போது மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் தீர்க்கமான முடிவில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசு, அதன் காரணமாக இந்த மாகாண சபை தேர்தல் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற தந்திரத்தை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

இப்போது அந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கான அறிவித்தல் வந்துவிட்டது. 12 பேர் கொண்ட அந்தத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் 06

# கனமழையும் வேகமான காற்றும் வடக்கு, கிழக்கில் அதிகரிக்கலாம்

## பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை



“வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை வியாழக்கிழமை முதல் வேகமான காற்று வீசுகையும் மிகமிகக் கனமழையும் பெய்யக்கூடும். இதனால், தாழ்நில பகுதி மக்கள் வெள்ளம் குறித்து அவதானமாகச் செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியருமான நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

காலநிலை அவதானிப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

“வங்காள விரிகுடாவில் இலங்கையின் பொத்துவிலுக்கு தென்கிழக்கு திசையில்664கி.மீ.தொலைவில்காணப்படும் காற்றமுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று தற்போது நன்கமைந்த காற்றமுத்த தாழ்வு நிலையாக மாறியுள்ளது. இது, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இலங்கையின் கிழக்கு மாகாண கரையோரமாக வடக்கு நோக்கி நகர்ந்து, வடக்கு மாகாணத்தை அண்மித்து மேலும் வடக்கு நோக்கி நகர்ந்து தமிழ் நாட்டை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தாழமுக்கமும் இலங்கைக்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையுள்ளது. தற்போது, வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்குப் பரவலாக மிதமான மழை கிடைத்து வருகின்றது.

நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, ஊவா, வட மத்திய, மத்திய மற்றும் தென் மாகாணங்கள் முழுவதும் மிகமிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. பல தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் அபாயம் உள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 8, 9, 10, 11ஆம் திகதிகளில் மிக மிகக் கனமழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக – முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நாளை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை திரட்டிய மழைவீழ்ச்சியாக 450 மி.மீ. க்கு மேல் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நாளை முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை வடமேற்கு, மேற்கு, சப்ரகமுவ மாகாணங்களுக்குப் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கக்கூடும். இது, தற்போது தாழமுக்கமாகக் காணப்பட்டாலும் இலங்கை கரையை அண்மிக்கும்போது காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதனால் நாளை முதல் கிழக்கு, வடக்கு வடமத்திய ஊவா மாகாணங்களில் காற்றின் வேகம் மணிக்கு 60 கி.மீற்றரை விடக் கூடுதலாக வீசக்கூடும்.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் என்பதனால் நிலச்சரிவு அனர்த்தங்களும் நிகழக்கூடும்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக அதிகாரிகள் முன்கூட்டியே மக்களுக்கு இந்தக் கனமழை தொடர்பிலும் வெள்ள அனர்த்தங்கள் மற்றும் நிலச்சரிவுகள் தொடர்பிலும் தெரியப்படுத்துவதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

இந்தத் தாழமுக்கத்தை சாதாரண நிகழ்வாகக் கருத வேண்டாம். மிக வேகமான காற்றோடு கூடிய மிகக் கனமழை (இடி, மின்னலும் இணைந்ததாக) மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். மிக முக்கியமாக இது தாழமுக்கம் – தாழ்வு மண்டலத்தோடு இணைந்த நிகழ்வு என்பதனால் வழமையை விட கடல் மட்டம்

மிக உயர்வாகக் காணப்படும். ஆகவே, சாதாரண காலங்களில் வெள்ள நீர் கடலுக்குள் செல்வது போல் இக்காலத்தில் வெள்ள நீர் கடலுக்குச் செல்லாது. ஆகவே, இதனையும் கருத்தில் கொண்டு செயற்படுவது சிறந்தது.”

– என்றுள்ளது.

# ஆலய வளாகத்தில் பாம்பு தீண்டி இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்



ஆலய வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி – கல்மடு நகரில் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த சிறீகாந்தன் கிருசிகன் (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

பாம்பு தீண்டிய இளைஞரை அங்கிருந்தவர்கள் உடனடியாக தருமபுரம் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இளைஞரின் சடலம் உடற்கூராய்வுக்காககிளிநொச்சிமாவட்டவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## மாகாண சபைத் தேர்தல் முறைமை:

# தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை சபையில் சமர்ப்பிப்பு!

மாகாண சபைகள் தேர்தல் முறைமையைத் தெரிவு செய்வது குறித்து ஆராய்வது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான பிரேரணை நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதற்கமைய, மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்பது குறித்து இந்தத் தெரிவுக்குழு ஆராயவுள்ளது.

அதன்பின்னர், இது தொடர்பான தனது முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என அந்தக் குழுவுக்குப் பணிக்கப்படும்.

இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அவசரகாலச் சட்டம்: முறைகேடு இல்லை!

## நாடாளுமன்றில் பிரதமர் விளக்கம்



அவசரகாலச் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படவில்லை என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“பேரிடர் நிலைமையை முகாமை செய்வதற்காகவே அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. மாறாக கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்காக அது பயன்படுத்தப்படவில்லை.” – என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

“உரிய ஆய்வுகளின் பின்னரே மக்களை மீளகுடியமர்த்த வேண்டும். இதற்குரிய பணிகளை அரச அதிகாரிகள் முன்னெடுக்கின்றனர். அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காகவுமே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுகின்றது.” – என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.



# பிரதமர் ஹரிணி அமரசூரிய உடனே பதவி விலக வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. மீண்டும் வலியுறுத்தல்

"பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உடனடியாகப் பதவி விலக வேண்டும்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

"நாட்டின் கலாசாரத்தை மறந்து மேற்குலகின் தேவைக்கேற்ப என்.பி.பி. அரசு தொடர்ந்து செயற்படுமானால் வெனிசுலாவில் நடந்ததே இலங்கையிலும் நடக்கக்கூடும்." - என்றும் நாமல் எம்.பி. எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாடப் புத்தகத்தில் உள்ள விடயங்கள் தெரியவில்லையெனில் நாட்டு மக்கள் பற்றி இந்த அரசு எப்படி புரிந்துகொள்ளும்?

கலாசாரம், ஆன்மீக பண்பாடு இன்றி நாடு ஏனோ, தானோ என்று சில மேற்குலக நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பயணிப்பது ஆபத்தானது.

ஏனெனில் நாடொன்றுக்கு (வெனிசுலா) வந்து விமானத்தில் ஜனாதிபதியைக் கொண்டு சென்றது போன்று எமது நாட்டிலும் நடக்கக்கூடும்.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமம் எனக் கூறப்பட்டாலும் ஆளுங்கட்சியினருக்கு வேறுபட்ட விதத்தில் செயற்படும் நிலையே காணப்படுகின்றது.

அதேவேளை, பிரதமர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். கல்விக்கு ஏற்பட்டுள்ள சீரழிவு தொடர்பிலேயே அவர் பதவி விலக வேண்டும்." - என்றார்.

# பிரதமர் ஹரிணி பதவி விலகப்போவதில்லை!

## ஆளுங்கட்சி எம்.பி. உறுதிப்படுத்தல்



பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவிவிலகப்போவதில்லைஎன்றுஆளுங்கட்சி உறுதிப்படுத்தியுள்ளது.

"பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது பதவியில் இருந்து விலகப்போவதில்லை. அதற்குரிய எந்தவொரு தேவையும் தற்போது எழவில்லை." - என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

கல்விக் கட்டமைப்பைச் சீர்குலைத்துள்ள பிரதமர் பதவி விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளுங்கட்சி எம்.பியான தேவானந்த சுரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டுக்கு, மாணவர் சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் எந்தவொரு கல்வி மறுசீரமைப்பும் இடம்பெறமாட்டாது. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணை என்னவென்பது எமக்குப் புரிகின்றது.

அதற்கமையவே எமது செயற்பாடு இடம்பெறும். மக்களுக்குத் துளியளவும் துரோகம் இழைக்காத வகையில் அரசின் பயணம் தொடரும்.

கல்வி மறுசீரமைப்பு என்பது காலத்தின் கட்டாய தேவையாகும். எனவே, இந்த விடயத்தில் குறுகிய நோக்கில் அரசியல் நடத்துவதற்கு எவரும் முற்படக் கூடாது.

நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறைமையை உருவாக்குவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கல்வி மறுசீரமைப்பு விடயத்தில் பிரதமரை இலக்கு வைத்து போலித் தகவல்களைப் பரப்புவதற்குச் சிலர் முற்படுகின்றனர். ஆளுங்கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தவும் முற்படுகின்றனர். ஆனால், எதிரணியின் கனவு பலிக்காது.

பிரதமர் பதவி விலக வேண்டிய தேவை எழவில்லை. அவர் பதவி விலகவும் மாட்டார்." - என்றார்.





# 2025 இல் சவால்களை வெற்றி பெற்றோம்! 2026 இல் இலக்குகளை எளிதில் அடைவோம்!!

## வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

"2025ஆம் ஆண்டு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எமது வேலைத்திட்டங்களை நாம் வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தோம். 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2026ஆம் ஆண்டில் அத்தகைய சவால்கள் எமக்கு மிகக் குறைவு. எனவே, இந்த ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நிறைவேற்ற வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் பாதீட்டுப் புத்தகத்தை (நிதிக்கூற்று) உத்தியோகபூர்வமாக வெளியிடும் நிகழ்வு, வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள் அவரால் தெளிவுபடுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், கடந்த ஆண்டு அனைத்துத் தரப்பினரதும் பூரண ஒத்துழைப்புடன் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்ற முடிந்துள்ளது எனக் குறிப்பிட்டதுடன், அதற்காகப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

இதன் பின்னர், 2026ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையின் பாதீட்டுப் புத்தகத்தை ஆளுநர் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்ததுடன், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதம கணக்காளர்கள் ஆகியோரிடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

"2025ஆம் ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டமானது நாடாளுமன்றத்தில் மார்ச் மாதமே நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பின்னரே, அதாவது ஏப்ரல் மற்றும் மே மாதங்களிலேயே எங்களால் திட்டப் பணிகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. அதனைவிட, புதிய கொள்முதல் வழிகாட்டுதல்களும் அதன் பின்னரே வெளியிடப்பட்டிருந்தன.

மேலும், எமது ஆளணித் தொகுதியில் பெருமளவு வெற்றிடங்கள் நிரப்பப்படாமலும் இருந்தன. இவ்வாறான பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே, எமக்குக் கிடைத்த நிதியை நாம் வினைத்திறனாகச் செலவு செய்திருக்கின்றோம்.

ஆனால், 2026ஆம் ஆண்டில் இவ்வாறான சவால்கள் பெரிதாக இல்லை. நாம் இந்த மாதமே இந்த ஆண்டுக்குரிய திட்டங்களை ஆரம்பிக்க முடியும். அத்துடன் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களின் தொடர் வேலைகளையும் இப்போதே தொடங்க முடியும். ஆளணிப் பற்றாக்குறையும் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே, கொள்முதல் பணிகளை ஆண்டின் முதல் காலாண்டுக்குள்ளேயே நிறைவு செய்யவும் முடியும். இதன் மூலம் ஓகஸ்ட் மாதத்துக்குள் திட்டங்களை முழுமைப்படுத்த வேண்டும்.

நாம் எமது திட்டங்களை முன்னெடுக்கும்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் கொள்கையையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அரசு நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிக்கின்றது. அதைப்போல் ஏற்றுமதியையும், உற்பத்திப் பொருளாதாரத்தையும் வலுப்படுத்துகின்றது. கிராமிய வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் மயமாக்கல், முதலீட்டுக்கு உகந்த சூழல் மற்றும் சுற்றுலாத்துறை எனப் பல்வேறு விடயங்களை அரசு ஊக்குவித்து வருகின்றது. எமது திட்டமிடல்களின்போது இவற்றையும் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களின் அபிவிருத்திக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பல ஆண்டுகளாக அபிவிருத்தியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட கிராமங்களுக்கே நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும்." – என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதம கணக்காளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.







# இலங்கை - சிங்கப்பூர் இடையில் கூடுதல் விமான சேவை ஆரம்பம்




சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் கூடுதல் பிற்பகல் விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிர்வாக இயக்குநர் வசந்த குடலியனகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சிங்கப்பூரின் சாங்கி சர்வதேச விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு ஒவ்வொரு செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் புதிய பிற்பகல் சேவை இயக்கப்படவுள்ளது.

இதற்காக சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம், ஏர்பஸ் A350 – 900 விமானத்தை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் இந்த சேவைகள் ஆரம்பமாகவுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் இனி வெளியிட வேண்டும்.

இந்தப் பன்னிரண்டு உறுப்பினர்களில் நால்வர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவராக இருப்பார். இந்த எதிர்க்கட்சிகளின் நான்கு உறுப்பினர்களில் தமக்கு ஓர் இடத்தை வழங்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரி இருக்கின்றார் எனத் தெரிகின்றது. இதற்கான கோரிக்கையை அவர் எதிர்க்கட்சித் தலைவரின் இணைப்பாளருக்கு அனுப்பி இருக்கிறார்.

ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை அப்படியே மீண்டும் கொண்டு வருவதற்கான தனிநபர் சட்டமூலத்தை அவரே தற்போதைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார் என்பது தெரிந்த விடயம்தான். அதனால் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமக்கு இடமிருக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பு நியாயமானது என்ற ஒரு கருத்து நிலைப்பாடு உள்ளது.

இதே சமயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்த்து ஹக்கீமும் மலையாக மக்களின் நலனை இந்த தெரிவு குழுவில் பேணுவதற்காக மனோ கணேசனும் தங்களுக்கும் இடத்தைக் கோரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளுக்கு நான்கு இடங்கள் மட்டுமே இந்த தேர்வு குழுவில் இருக்கும் என்பதால் யாருக்கு அந்த இடங்களை எதிர்க்கட்சித் தலைவர் வழங்கப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கு எதிராக ஆளும் தரப்பில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் காட்டமான கருத்துக்களை நேற்று நாடாளுமன்றத்தில் வைத்தார் என்று செய்திகள் வெளியாகின.

சிறிதரனுக்கு எதிராக பார் பேர்மிட் குற்றச்சாட்டுக்கள், சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் என்று எல்லாம் பல குற்றச்சாட்டுகளை அடுக்கினார் அமைச்சர் சந்திரசேகரன். ஆனால் அவரது அரசு தான் ஆட்சியில் இருக்கின்றது.வெறும் அபவாதக் குற்றச்சாட்டுகளை அடுக்குவதை விடுத்து அல்லது அந்த குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படுகின்றன என்று மாயாஜாலம் காட்டுவதை விடுத்து, உண்மையில் சிறிதரன் தவறிழைத்திருந்தால் அவருக்கு எதிராக தங்களுடைய அரசைக் கொண்டு சரியான நடவடிக்கையை அமைச்சர் சந்திரசேகரனின் தரப்பு செய்ய முடியும். அதைச் செய்ய லாயக்கற்ற சந்திரசேகரனின் அரசு, வெறுமனே சிறிதரனுக்கு எதிராக வாய்ச் சவடால் கருத்துக்களைக் கதைத்துக் கொண்டிருப்பது நையாண்டிக்குரிய விடயமாகும்.

ஆளும் தரப்பின் மூத்த அமைச்சர் ஒருவர் சிறிதரனை கரித்துக் கொட்டுவதாக வெளியில் படம் காட்டப்பட்டாலும், நேற்று ஆளும் தேசிய மக்கள் கட்சியின் தமிழ் எம்.பிக்கள் பலர் நாடாளுமன்றத்தில் சிவஞானம் சிறிதரன் எம்.பியைச் சந்தித்து அவருக்கு தங்கள் ஆதரவை (solidarity) உறுதியாக தெரியப் படுத்தினர் என்று அறிய வந்தது.

நாடாளுமன்ற குழுத் தலைவர் சிறிதரன் தனக்கு எதிராக அவரது கட்சி சில ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று செய்திகள் வெளியான பின்னணியில், இந்த ஆண்டுக்காக நாடாளுமன்றம் முதல் தடவையாக நேற்று கூடிய சமயத்தில், ஆளுந்தரப்பில் இருந்த பல தமிழ் எம்.பிக்கள் சிறிதரனைத் தொடர்பு கொண்டு,சந்தித்து, புது வருட வாழ்த்துத் தெரிவித்து அவரோடு உரையாடினர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசு எடுத்த சரியான முடிவுகளைத் தான் நீங்கள் வரவேற்று ஒத்துழைப்பு வழங்க முன் வந்தீர்கள், அதற்காக தண்டிக்கப்படுவோம் என்று நீங்கள் அஞ்சத் தேவையில்லை, உங்களுக்கு எங்கள் ஆதரவும் ஐக்கியமும் உண்டு என்ற சாரப்பட ஆளுந்தரப்பு தமிழ் எம்.பிக்கள் சிறிதரனிடம் தெரிவித்தனர் என அறிய வந்தது.

அரசியலில் சிறிதரன் நிலைத்து நிற்பதற்கான வலிமையான ஆதரவு தேசிய மக்கள் சக்தி பக்கத்திலிருந்தும் அவருக்குக் கிடைப்பது அவருக்கான பிளஸ் பொயிண்ட்தான்தான்.

## அவசரகாலச் சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன் டித்வா சூறாவளியால் இடம்பெயர்ந்த சிலரை அரசு வேறு இடத்துக்கு மாற்ற வேண்டியிருப்பதால் இது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒப்புதல் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"யாழ். தையிட்டி காணி உரிமையாளர்கள் அறவழியிலேயே போராடினார்கள். ஆனால், அவர்கள் மீது பொலிஸார் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

வேலன் சுவாமிகள் மிக மோசமாகக் கைது செய்யப்பட்டார். பொலிஸார் அராஜகத்தில் ஈடுபட்டனர். பௌத்த துறவி ஒருவரை இவ்வாறு கைது செய்ய முடியுமா?

நீங்கள் இந்து ஆலயங்கள், கத்தோலிக்க தேவாலயங்களை இடித்து அழிக்கின்றீர்கள். அப்படியானால் வலுக்கட்டாயமாகக் கட்டப்பட்ட புத்த விகாரையை இடிக்க முடியாதா?

வடக்கு, கிழக்கில் இராணுவம் இன்றளவிலும் குவிக்கப்பட்டுள்ளது. இதனை மாற்றுங்கள். தமிழர்களுக்கு நீதியையும், நியாயமான தீர்வையும் வழங்க முன்வாருங்கள்." –என்றார்.

"இந்த நாட்டில் நிமலராஜன், சிவராம், சுகிர்தராஜன் என ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் கொலைக்குக் காரணமானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை – நீதி கிடைக்கவில்லை." – என்றும் சபையில் உரையாற்றும்போது சிறீதரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

## பிரதமர் ஹரிணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடுவார்கள் என்று கூறப்படுகின்றது.

தரம் 6 ஆங்கிலப் பாடத் திட்டத்தில் பொருத்தமற்ற வலைத்தளத்துக்கான இணைப்பு வழங்கப்பட்டமை மற்றும் கல்விச் சீர்திருத்தங்களில் உள்ள சிக்கல்கள் காரணமாக பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.



# வன்னி விழிப்புலனற்றோரின் குடும்பங்களுக்கு 13 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கல்

## 'தாயகம்' அறக்கொடை நிறுவனம் 7ஆவது வருடமாக விநியோகம்

'தாயகம்' அறக்கொடை நிறுவனத்தினால் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் 150 குடும்பத்தினருக்கு பொங்கல் பானைகளும் பொங்கல் பொதிகளும் மற்றும் விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் குடும்பங்களைச் சேர்ந்த 180 மாணவர்களுக்கு சீருடையுடன் காலணிகளும் உள்ளடங்கலாக ரூபா 13 லட்சத்து 14 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் உள்ள ராஜா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மதிய விருந்துடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த ஏழு வருடங்களாக வருடம் தோறும் வீரசிங்கம் சிறிதரன் தலைமையிலான 'தாயகம்' அறக்கொடை நிறுவனம் இந்தப் பேருபகார நடவசிக்கையை தொடர்ந்துதவறாதுமுன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.












நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிரதமருக்கு வலுக்கும் எதிர்ப்பு

கடந்த பொதுத் தேர்தலில் பெரு வெற்றியோடு வலிமையான அரசாங்கத்தை அமைத்த தேசிய மக்கள் சக்திக்கு எதிராக அரசியல் செய்வதற்கும், பிரசாரங்களை முன்னெடுப்பதற்கும் விடயங்கள் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருந்த எதிர்க்கட்சியினருக்கு, கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் ஆறாம் ஆண்டு ஆங்கில பாடத்திட்டத்தில் பொருத்தமற்ற வலைத்தள இணைப்பு வழங்கப்பட்ட விடயம் வெறும் வாய்க்கு மெல்ல அவல் கிடைத்த விவகாரமாகி இருக்கிறது.

கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியாவுக்கு எதிராக இந்த விடயத்தைத் தூக்கிப் பிடித்துள்ள பிரதான எதிர்க்கட்சிகள், இந்த விவகாரத்தை ஒட்டி பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைக்க முடிவு செய்திருக்கின்றன என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

நேற்று நடைபெற்ற பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சிளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கையெழுத்திடுவார்கள் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே, முறையற்ற இணையதளத்தினுடைய இணைப்பு பாடத்திட்ட வழிகாட்டியில் இடம்பெற்றமையை ஒட்டி கல்வி அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கோரியிருந்தார்.

இதே கோரிக்கையை பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில்லவும் முன்வைத்திருந்தார். பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சராகப் பதவி வகித்துக் கொண்டிருக்க, தரம் ஆறு பாடப் புத்தகத்தில் சர்ச்சைக்குரிய விடயம் இடம்பெற்றமை தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்குரியது, ஆகவே அவர் கல்வி அமைச்சர் பதவியில் இருந்து உடன் விலக வேண்டும் என்பது உதய உதய கம்மன்பில்லவின் வாதமாக உள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகித்தாலும் அவர் அதன் பிரதான பங்குதாரர்களான ஜே.வி.பி. கட்சியை சேர்ந்தவர் அல்லர். அவர் வகிக்கும் பிரதமர் பதவி அந்தத் தேசிய மக்கள் சக்திக் கூட்டின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. தரப்புக்குள் இருந்து அழுத்தம் அதிகரித்து வருகின்றது. அதனால் பிரதமர் பதவியில் இருக்கும் ஹரிணிக்கு ஆட்சி தரப்புக் கூட்டுக்குள் நெருக்கடி அதிகமாக இருந்து வருவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி உள்ளன.

இதுவரை காலமும் ஆளும் தரப்பின் கூட்டுக்குள் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, இப்போது எதிர்க்கட்சிகள் கையில் எடுத்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற எதிர்ப்பை மேலதிகமாக சந்திக்க வேண்டியவராக இருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் இந்த முயற்சியை நாடாளுமன்றத்தில் தமது அரசுக்கு இருக்கும் பெரும்பான்மையை வைத்து இலகுவாக ஆளும் தரப்பு முறியடித்துக் கொண்டாலும், ஆளும் தரப்புக்கு எதிரான பிரசார மேடையாக - களமாக - இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தை எதிர்க்கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளும் என்பது திண்ணம். ஆளும்தரப்பு ஒன்றுபட்டு நின்று, தங்களுடைய பிரதமரைக் காபந்து பண்ணுவதில் சிரத்தையாக இருக்குமா என்பதையும் அவதானிக்க முடியும்.




# வடக்கு, கிழக்கில் பொலிஸ் அராஜகமா? சிறீதரன் - சந்திரசேகர் கடும் சொற்போர்

நாடாளுமன்றத்தில் நேற்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக் கும் இடையில் சொற்போர் மூண்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற விவாதத்தின்போது வடக்கு, கிழக் கில் பொலிஸ் அராஜகம் இடம்பெறுகின் றது என்று சிறீதரன் எம்.பி. குற்றஞ்சாட்டி னார். தையிட்டி போராட்டக் களத்தில் வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்ட மையை அதற்கு உதாரணம் காட்டி னார்.

அத்துடன், தமிழர் விவகாரம் தொடர் பில் என்.பி.பி. அரசின் அணுகுமுறையை யும் அவர் விமர்சித்தார்.

இதற்குத் தனது உரையின்போது அமைச்சர் இ.சந்திரசேகர் பதில் வழங்கி னார்.

"வடக்கில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பமாகி யுள்ளன.

பல்பொருள் அங்காடி மற்றும் மதுபான சாலை வைத்துள்ள அரசியல்வாதிகள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறு கின்றன. இதனால் அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் தமக்கான இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்ப தால் பொலிஸ் அராஜகம் என்ற விடயத் தைக் கூறி தமிழ் மக்களைக் குழப்பப் பார்க்கின்றனர்.

சிறீதரனே, சுமந்திரனிடம் நீங்கள் அவதானமாக இருங்கள். தமிழரசுக் கட்சி என்பது சீரழிந்துபோன கட்சியாக மாறி யுள்ளது. அந்தக் கட்சி போதைவஸ்து கட்சியாகவும் மாறிவிடக்கூடாது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் பொலிஸ் அராஜகம் இடம்பெறவில்லை. அவசரகாலச் சட்டத்தை நாம் தவறாக வும் பயன்படுத்தவில்லை.

தையிட்டி விகாரைப் பிரச்சினையைக் கூட நேர்மையான முறையில் தீர்ப்ப தற்கே முயற்சிக்கின்றோம். தமிழ் மக்கள் எம்முடன்தான் உள்ளனர்." – என்று அமைச்சர் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

இதனால் கடுப்பான சிறீதரன் எம்.பி., முதலில் அமைச்சர் திருந்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

என்.பி.பி. அரசின் பொலிஸ் அராஜ கம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இடித் துரைத்தார்.

# ஐ.தே.கவின் பிரதித் தவிசாளராக நவீன் திஸாநாயக்க நியமனம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள் ளார்.

இதற்குரிய நியமனக் கடிதம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் நவீன் திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள் ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வகித்த நவீன் திஸாநாயக்க, பின்னர் அந்தப் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.


இந்நிலையிலேயே அவருக்குக் கட்சி யில் தற்போது புதிய பதவி வழங்கப்பட்டுள் ளது.

காமினி திஸாநாயக்கவின் மகனே நவீன் திஸநாயக்க என்பது குறிப்பிடத்தக் கது.



# 3 ஆண்டுகளில் மின்சாரக் கட்டணம் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்படும்

## வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி உறுதி



வாக்குறுதியளித்தபடி மூன்று ஆண் டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கும் இலக்கை நோக்கி அரசாங்கம் நகர்ந்து வருவதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் ஒரு மின் அலகின் சராசரி உற்பத்திச் செலவு 37 ரூபாவாக இருந்தது.

தற்போது இந்தச் செலவு 29 ரூபா வாகக் குறைந்துள்ளதாகவும் தெரி வித்தார்.

மின் அலகின் சராசரிச் செலவை 25 ரூபாவாகக் குறைக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

இந்த இலக்கை எட்டினால், மின்சாரக் கட்டணத்தை ஒட்டுமொத்தமாக 32 சத வீதத்தால் குறைக்க முடியும் என அமைச் சர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 2024 ஜூலை மாதம் மின் அலகு ஒன்றின் விலை 37 ரூபாவாக இருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத் தால் குறைப்பதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்ததை நினைவு கூர்ந்தார்.

# மாநகரசபை, யாழ்ப்பாணம்

# பொது அறிவித்தல் - 2026

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழில் முயற்சியை மேற்கொள்வோர், தொழில் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கீழ்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பில் எமது சபையின் தொடர்புடைய கிளைகளில் அலுவலக நாட்களில் மேலதிக விபரங்களையும் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- 1. மாநகர சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில் 2025.12.26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2469 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாகக் கட்டணங்கள் அறவிடப்படும்.

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதன உரிமையாளர்கள் | ஆதன உரிமையை பெற்றுக்கொண்டவர்கள் மாநகரசபையின் ஆதனவரிப்பகுதியில் பெயர்மாற்றப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம் அல்லது jaffnamc2025cendri.org என்ற இணையத்தள முகவரியிலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br>ஆதனவரிப்பகுதியில் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தினை சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு மூலம் பூர்த்தி செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உறுதிகள், தோம்பு, நிலஅளவைப்படம், வண்ணப்பதாரர்ஃவிண்ணப்பதாரர்கள் தேசிய அடையாள அட்டைப்பிரதி, ஆதன உரிமையாளர் கையொப்பமிடாத சந்தர்ப்பத்தில் ஆதன உரிமையாளரால் தத்துவ உரிமை கையளிக்கப்பட்டவர் கையொப்பமிடுவதோடு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்திய தத்துவ உரிமைப்பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு ஆதனவரிப்பகுதியை தொலைபேசி மூலமாகவோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.<br>தொலைபேசி இலக்கம் : 021 021 7697 |
| 02 | ஆதன வரி செலுத்துதல் | மாநகர சபைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2026 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது.<br>பின்வருமாறு இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகின்றது.<br>மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2025 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு / மதிப்பீட்டை 2026 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி மதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலைமதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேணடிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1)ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களில் நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8% சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10% சதவீதமாகவும விதிக்கப்படல் வேண்டும் என்றும்,<br>மேலும், 2026 ஆம் ஆண்டில் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாணமாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், அட்டவணையின் கீழ் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% இலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.<br>முதலாவது காலாண்டு<br>01.01.2026 - 31.03.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.01.2026<br>இரண்டாவது காலாண்டு<br>01.04.2026 - 30.06.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 30.04.2026<br>முன்றாவது காலாண்டு<br>01.07.2026 - 30.09.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.07.2026<br>நான்காவது காலாண்டு<br>01.10.2026 - 31.12.2026<br>5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதி திகதி - 31.10.2026 |
| 03 | வியாபார உரிமம் / வியாபார வரி | மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து வியாபார உரிமம் / வியாபார வரி என்பவற்றை அலுவலகத்தில் 2026.03.31ஆந் திகதிக்குப் பிந்தாமல் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2026.03.31ஆந் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடை செய்தல் | மாநகர சபையின் எல்லைக்குள்மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரம் செய்வோர் | சபையின் பொதுச் சந்தைகள், மீன் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் சுற்று வட்டத்தினுள் மரக்கறி, தேங்காய். மீன் வகைகள், கோழி இறைச்சி பழ வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் | 2264/18 ஆம் இலக்க 2022 ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானிக்கமைய பாகம் ஈ இல் 1 தொடக்கம் 39 வரையான தொழில்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.<br>1. பத்து அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் மெழுகுவர்த்திகள் உற்பத்திசெய்யும் கைத்தொழில்கள்<br>2.ஐந்திற்கு குறைவானவர்கள் பற்றிக் (சாயமிடல்) கைத்தொழில்கள்<br>3.ஐந்திற்கு குறைவானவர்கள் வர்த்தக சலவைக் கூடங்கள்.<br>4.பத்துக்கு மேற்பட்ட நெசவுத்தெறிகள் ஃ இயந்திரங்களைக் கொண்ட பின்னல், பூத்தைல் கைத்தொழில்.<br>5.நாளொன்றிற்கு 200 லீற்றருக்கு குறைவான தேங்காய்எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்.<br>6.வர்த்தகமட்ட தாவர எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்.<br>7.மதுசாரம் சாராத பானங்கள் உற்பத்திசெய்யும் அல்லது போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள்.<br>8.உலர் பதனிடல் தொழிற்பாடுகளைக்கொண்ட அரிசி ஆலைகள்.<br>9.அரைக்கும் ஆலைகள்.<br>10.சிகரட்டுக்கள் அல்லது புகையிலை தொடர்பான வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>11.கந்தகத் தூபமூட்டுதலுடன் கறுவா தூப மூட்டும் கைத்தொழில்கள்.<br>12.சமையல் உப்பு பொதியிடும் மற்றும் பதனிடும் கைத்தொழில்கள்.<br>13.தேயிலை கலத்தல் ஃ கலக்குதல் கைத்தொழில்கள்.<br>14.உணவு உற்பத்தி செய்யும் அல்லது பதனிடும் கைத்தொழில்கள்.<br>15.வெதுப்பகங்கள் மற்றும் இனிப்புப் பண்ட தயாரிப்பிடங்கள்.<br>16.முதிர்ச்சியடைந்த பறவைகளுக்குக் குறைந்ததுமான முதிர்ச்சியடைந்த பறவைகளைக் கொண்ட கோழிப்பண்ணைகள்.<br>17.பன்றிப் பண்ணைகள் அல்லது மாட்டுப் பண்ணைகள்.<br>18.முதிர்ச்சியடைந்த விலங்குகளைக்கொண்ட ஆட்டுப் பண்ணைகள்.<br>19.கலவன் பண்ணைகள்.<br>20.பழம் அல்லது மரக்கறிகள் அல்லது இறைச்சி அல்லது வேறு உணவு களஞ்சியப்படுத்துகைகள்.<br>21.கொங்கிறீற்று முன்வார்ப்பு கைத்தொழில்கள்.<br>22.சீமெந்துக் குற்றிகள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்.<br>23.சுண்ணாம்புச் சூளைகள்.<br>24.“பரிசுச் சாந்தை” மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏதேனும் கைத்தொழில்.<br>25.சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் ஃ கட்டியாக்கும் கைத்தொழில்கள். |

| | | | |
|---|---|---|---|
| | | | 26.கூரைஓடு மற்றும் செங்கல் சூளைகள்.<br>27.கண்ணாடிப்பொருட்கள் உற்பத்தி செய்யும் கைத்தொழில்.<br>28.கருங்கல் வெட்டும் மெருகேற்றும் கைத்தெழில்கள்.<br>29.வெடிபொருட்களைப் பயன்படுத்தி ஒற்றைத்துளை தகர்ப்புடன் கைவினைசார் சுரங்கந்தோண்டும் செயற்பாடுகள்.<br>30.மர ஆலைகள் மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில்கள்.<br>31.மரத்தை பருவப்படுத்துவதற்கான கைத்தொழில்கள்.<br>32.தச்சு வேலைத்தளங்கள்.<br>33.ஐந்து அல்லது 10 வேலையாட்களுக்கு குறைவானவர்களுக்குமான உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள்.<br>34.நாளொன்றில் 25 அல்லது 100 ஆட்களுக்கு குறைந்ததுமான விடுதிகள் அல்லது அதனையொத்த வசிப்பிடங்கள்.<br>35.கராஜ்கள்.<br>36.கொள்கலச் சாலைகள்.<br>37.அச்சகங்களும் எழுத்து அச்சு இயந்திரங்களும்.<br>38.சடலங்களை நறுமணமூட்டிப் பாதுகாத்தலுடனான பிணவறைகள்.<br>39.இப்பட்டியலின் அட்டவணையின் பாகம் ஈ இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் செயற்பாடுஃகைத்தொழில்கள். |
| 06 | காணி உப பிரி விடுகை | ஆதன உரிமையா ளர்கள் | ஆதனம் ஒன்று துண்டுகளாகப் பிரிக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 07 | காணி ஒருங்கிணைத் தல் | ஆதன உரிமையா ளர்கள் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்கள் இணைக்கப்படும் பட்சத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |
| 08 | படவரைஞராக பதிவு செய்தல்ஃபுதுப்பித்தல் | படவரைஞர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் 47 தொடக்கம் 59 வரையான துடன மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணைஃ ஒழுங்கு விதி நடைமுறைக்கமைவாக 2025.11.26 ஆந் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய மாநகர சபையில் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 23 ஆந் திகதிக்கு முன்னர் எமது சபை எல்லைக்குள் படவரைஞராக சேவைகளை வழங்க விரும்பியவர்கள் எமது தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொண்டிருத்தல் அல்லது புதுப்பித்து இருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதோரி னால் அல்லது புதுப்பிக்காதோரினால் வரையப்படும் படங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வித்தகைமை Drafting Technology |
| 09 | துவிச்சக்கரவண்டி உரி மம் மற்றும் மிருகவரி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரி மையாளர்கள் மற்றும் வளர்ப்பு நாய் உரிமை யாளர்கள் | 2026ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் (நாய்களுக்கானது) என்பன 31.03.2026ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் படிவ கட்டணத்துடன் உரிய கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 10 | விளம்பரங்களை அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட் சிப்படுத்தும் முகவர்கள், வர்த்தக நிலைய உரி மையாளர்கள் | மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உருவாக்கப்பட்ட 1952/14 ஆம் இலக்க 2016 ஆம் ஆண்டு மாசி மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி யின் நியமத்துணை விதியின் பிரகாரம் மாநகர சபை எல்லைக்குள் பதாதைகள், விளம்பரங்களை நிறுவும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பர நிறுவனங்கள். அல்லது வேறு நபர்கள் சபையின் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தல் வேண்டும். .மேலும் காட்சிப்படுத்தல்களை, முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல் , கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப் புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை 2026.03.31ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் புதுப்பித்தல் அனுமதியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>இவ்விடயம் உரிய விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையா ளர்களது பொறுப்பாகும்.<br>யாருக்கும் ஆபத்தில்லாத வகையில் விளம்பரப்பலகை பொருத்தப்படல் வேண்டும் ஏதாவது சந்தர்ப்பத்தில் விளம்பரப்பலகையால் ஒருவருக்கு அல்லது சொத்துக்கு நட்டம் ஏற்படும் பட்சத்தில் விளம்பர உரிமையாளரால் ஈடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து 2026.03.31ஆந் திகதிக்குப் பின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 11 | திண்மக் கழிவுகள் தொடர்பாக குடியி ருப்பாளர்கள், வியாபார நிலையங்கள் கடைப் பிடிக்க வேண்டியவை. | மாநகர சபை எல்லைக் குள் வதியும் குடியி ருப்பாளர்கள், வியாபார நிலைய உரிமையா ளர்கள், அரச, தனியார் நிறுவனங்கள். | 1. ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனு மதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவை பொதுச்சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. வீட்டுகழிவு (குசினி) கழிவுகளை வாரத்தில் ஆகக்குறைந்தது 02 தடவை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை உறுதிப் படுத்துவதற்காக குடியிருப்பாளர்களிற்கு திண்மக்கழிவகற்றல் பதிவு அட்டை வழங்கப்பட்டுள்து. வீட்டுக்கழிவு (குசினி) தரம்பிரித்து வழங்கப்படல் வேண்டும். இச்சேவை முற்றிலும் இலவசமானது. எக் காரணம் கொண்டும் தரம்பிரியாத கழிவுகள் சேகரிக்கப்பட மாட்டாது. தரம் பிரியாது கழிவுகளை வீதியோரங்களில் வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>3. தாங்கள் வீடுகளில் சேரும் மேலதிக திண்மக்கழிவுகளை உரியமுறையில் தரம் பிரித்து மாநகரசபை யுடன் தொடர்பு கொண்டு மாநகரசபையின் கட்டண கழிவகற்றல் வாகனத்தில் அதற்கான கட்டணத்தினை அவ்விடத்தில் செலுத்தி கழிவுகளை அகற்றிக் கொள்ளமுடியும். அதற்கான உபபற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.<br>4. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மற்றும் தனியார் வர்த்தக நிலை யங்கள், உணவகங்கள, ஏனைய தொழில்முறை நிறுவனங்கள், முடிதிருத்தும் நிலையங்கள் என்பன தங்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உரிய கழிவகற்றல் கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அல்லது தடவைகளிற்கான அடிப்படையில் மாநகரசபையில் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை காண்பித்து கிரமமான முறையில் கழிவகற்றல் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். சபையினது குறித்த கழிவகற்றல் முறைக்கு ஒத்துழைக்காது கழிவகற்றலினை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>5. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங் களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச்செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.<br>6. பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை கொட்டுவோரை கண்காணிப்பதற்காக எமது சபை ஊழி யர்கள் இரவு பகலாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அத்துடன் ஊஊவுஏ உயஅநசய வும் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இனம் காணப்படுவோர்மீது உரிய சட்டநட வடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>7. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு கழிவகற்றல் வாகனம் ஒழுங்கு படுத்தப் பட்டு ஒரு குறிப்பிட்ட வீதிக்கு வாரம் ஒன்றிற்கு ஆகக் குறைந்தது 03 தடவைகள் கழிவகற்றல் வாகனமானது கழிவுகளை சேகரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டள்ளது.<br>8. திரவக் கழிவகற்றல் சேவையினை மாநகரசயையுடன் தொடர்பு கொண்டு சபை வாகனங்கள் மற்றும் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட வாகனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். |
| 12. | முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடம் | மாநகரசபை எல்லைக் குள் முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடங்களிலி ருந்து முச்சக்கரவண்டி, கார் சேவை வழங்கு வோர் | மாகாண சபையினால் 2016.02.02ஆம் திகதி வெளியிடப்பட்ட 1952/14ஆம் இலக்க இலங்கை சன நாயகக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதி களின் அத்தியாயம் 04 பிரிவு 11 இன் பிரகாரம் மாநகரசபை எல்லைக்குள் காணப்படும் முச்சக்கரவண்டி, கார் தரிப்பிடங்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் மாநகர சபையால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வாறு சபையின் கீழ் உள்ள தரிப்பிடங்களில் மட்டுமே முச்சக் கரவண்டி, கார் நிறுத்தி சேவையிலீடுபட முடியும் என்பதோடு குறித்த தரிப்பிடத்திற்கு நாளாந்த கட்டணமாக ரூபா 50/= இனை எமது அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடமுடியாது என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். |
| 13 | வீதி ஓரங்களில் கம் பங்களை நறுவி சேவை களை வழங்குதல் தொடர்பாக | வீதிஓரங்களில் கம்பங் களை நிறுவி சேவை களை வழங்குவோர் | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மாநகர சபையில் முறைப்படி அனுமதியினைப் பெற்ற பின்பே தமது சேவையினை ஆரம்பித்தல் வேண்டும். |
| 14 | நீர்வழங்கல் சேவை | நீரவழங்கல் சேவை தேவைப்படுடையோர் | 1.நீர்வழங்கல் சேவை<br>பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைக்கு மாநகர சபையுடன் தொடர்புகொண்டு கட்டணம் செலுத்துவதன்மூலம் குடிநீரையும், வாடகைக்கு தண்ணீர் தாங்கியினையும் பெற்றுக்கொள்ளமுடியும். |
| 15 | பொதுசுகாதாரம் பேணல் | ஆதன உரிமையா ளர்கள் / பராமரிப்பாளர் கள், வர்த்தகர்கள் | 1.சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படும் பொதுசுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள்ஃ பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொதுசுகா தாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுடன், டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள், |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருட்களை காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது வட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>2.உணவு குடிபானம் போன்றவை கையாளும் இடங்கள் அல்லது உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு திருப்திகர அறிக்கையின் அடிப்படையிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும்.<br>3.20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 16 | கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது | கால்நடைகள் / நாய்கள் வளர்ப்போர் | சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக விலங்குகள் நடமாடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி மாநகர சபையால் பிடிக்கப்படும். பின்னர் அவை உரிய காலத்தினுள் உரிமை கோரும் பட்சத்தில் பிடிகூலி தண்டம் மற்றும் பராமரிப்புச்செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். |
| 17 | வீதி ஒழுங்கு முறைகளை பேணல் | ஆதன உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக மரங்கள் மற்றும் பூக்கன்றுகள் நாட்டுதல் / வளர்க்கப்படுதல், கொங்கிறீற்றிலான கட்டுமானம் கட்டுதல், இருக்கைகள் அமைத்தல், இளைப்பாறல் மடங்கள் கட்டுதல், நடைபாதை வியாபாரம் செய்தல் என்பன பொதுமக்களிற்கு இடையூறாகவும், பொது ஒழுங்கு சீர்குலைவுக்கும் காரணமாக காணப்பட்டால் அவை தடைசெய்யப்படும் என்பதுடன் வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகளை உடனடியாக அகற்றுதல் வேண்டும். சபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத் தரப்படுகின்றது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப் பொருட்கள் சேமித்துக்கொள்வதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 18 | பொதுமயானங்களின் பயன்பாடு | மயானங்களை பயன் படுத்துவோர் | 1. கோம்பயன் மணல் இந்து மயானத்தில் உடலங்களை எரித்தல் / புதைத்தல் செயற்பாடுகள் மாநகர சபையில் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>2. கட்டணத்தை செலுத்துவதற்கு அலுவலக வேலை நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை நானாவித இறைவரிப்பகுதியிலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பாதுகாவலர் பகுதியினூடாகவும் செலுத்தப் படலாம்.<br>3. அனுமதிக்காக மேற்குறிப்பட்ட இடங்களில் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இறப்பு தொடர்பான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 19 | கழிவு நீர் | ஆதன உரிமையாளர்கள் / வர்த்தகர்கள் | பகிரங்க வெள்ள வடிகால்களில் வீட்டுக் கழிவு நீர் வியாபார நிறுவனங்களின் கழிவு நிர் சேகரிக்கப்படல் சட்டவிரோதமானதாகும். ஆவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20 | சிகிச்சா நிலையம் | தாய், சேய் | • கர்ப்பவதிகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பிரசவ பின் தாய்மார்களுக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குழந்தைகள் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• குடும்பத்திட்ட சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• புதிய திருமண தம்பதியருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• சுகவனிதையர் சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• இளவயதினருக்கான சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• போசாக்கு சிகிச்சா நிலையம் நடாத்துதல்<br>• பாடசாலை தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு<br>• விசேட தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு |
| 21 | வெளிக்கள செயற்பாடு | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள் | • வீட்டுத் தரிசிப்பு (சனத்தொகை கணக்கெடுப்பு, கற்பவதிகள், பிரசவ பின் தாய்மார்கள், குழந்தைகள், முன்பள்ளி சிறார்கள், யௌவன பருவத்தினர், குடும்பத்திட்டம் அனுசரிப்போர், புதிய திருமணத் தம்பதியினர்)<br>• சுகாதார கல்வி செயற்பாடுகள்<br>• தொற்றுநோய், தொற்றாநோய் தடுப்பு செயற்பாடுகள்<br>• கள நிறைபார்க்கும் மையங்களை நடாத்துதல்<br>• முன்பள்ளி தரிசிப்புகள்<br>• தாய்மார் கழகங்களை வழி நடாத்துதல்<br>• உள்ளூர் கலந்துரையாடல்கள் பங்கேற்றல் |
| 22 | பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்படும் சேவைகள் | மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பொது மக்கள் | • தொற்று நோய் கட்டுப்பாடு<br>• தொற்றா நோய் கட்டுப்பாடு<br>• நீர் சுகாதாரம்<br>• விலங்கு விசர் நோய் தடுப்பு<br>• உணவு சுகாதாரம்<br>• மருத்துவ நிலயங்களின் சுகாதார செயற்பாடுகள்<br>• தொழிற்சுகாதார மேம்பாடு<br>• பொதுச் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை<br>• திருவிழா சுகாதார மேற்பார்வை |
| 23 | Gov pay இணையவழி ஊடான கொடுப்பனவு | மாநகர சபை எல்லைக் குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச , தனியார் நிறுவனங்கள் | மாநகர சபைக்கான கட்டணங்களான ஆதன வரி, பதிவு செய்தல் மற்றும் பரிசோதனைக் கட்டணங்கள் – ஆதனம், வியாபார வரி, வியாபார உரிமம், உயர் தொழில் மீதான உரிமம், களியாட்ட வரி, வணிக ஸ்தலங்களுக்கான வாடகை, இறைச்சிக்கடை வாடகை, வாடகை (வீதி உருளை, மண்டபம், அரங்கு), இறைச்சிக்கடை குத்தகை, சந்தைக் குத்தகை, நல்லூர் திருவிழா குத்தகை, தண்ணீர் கட்டணங்கள், விளம்பரக் கட்டணங்கள், இந்துமயான கட்டணங்கள், கழிவகற்றல் கட்டணங்கள், பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் கட்டட விண்ணப்பங்கள், வாகன நிறுத்தல் கட்டணங்கள், படிவக் கட்டணங்கள், தண்டப்பணங்கள் என்பவற்றை பிரபலமான நிதி தொழிநுட்ப பயன்பாடுகள் மற்றும் இணைய வழி (Online) வங்கித் தளங்கள் மூலம் Govpay இணைய வழியூடாக எளிதில் செலுத்தி கொள்ள முடியும். மேலதிக தகவல்களை www.govpay.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சகல பொது மக்களும் மிகவும் கவனமெடுத்து செயற்படுமாறும், குறித்த அறிவித்தல்களை பின்பற்றத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# வென்னப்புவவில் 554 கிலோ பீடி இலைகளுடன் இரு சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

வென்னப்புவை, லுணுவில கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் கடந்த சனிக்கிழமை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக கடத்தப்பட்ட சுமார் ஐநூற்று ஐம்பத்து நான்கு கிலோகிராம் பீடி இலைகளுடன் ஒரு டிங்கி படகில் இருந்த இரண்டு சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வென்னப்புவை, லுணுவில கடல் பகுதியில் மேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான ஒரு படகு நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அந்த கடல் பகுதி வழியாக கரையை நோக்கிப் பயணித்த சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு ஒன்று கண்காணிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. அப்போது, சட்டவிரோதமாக பதினெட்டு பொதிகளில் பொதிச்செய்து கொண்டு வரப்பட்ட சுமார் ஐநூற்று ஐம்பத்து நான்கு கிலோகிராம் பீடி இலைகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு சந்தேக நபர்களும் 19 மற்றும் 29 வயதுடையவர்கள். கற்பிட்டியின் ஆனவாசலை மற்றும் ஜனசவிபுர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். பீடி இலைகள் மற்றும் டிங்கி படகுடன் சந்தேக நபர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க மற்றும் கலால் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.




# ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய போதைப்பொருளுடன் 3 இந்தியப் பிரஜைகள் கைது!

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான குஷ் ரக போதைப்பொருள்களுடன் இந்தியப் பிரஜைகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ருடு 403 என்ற விமானம் மூலம் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சுமார் 50 கிலோகிராம் நிறையுடைய போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பருத்தித்துறைப் பிரதேச சபைக்குரிய வீதிக்கு கொங்கிறீட் போட்ட பருத்தித்துறை நகரசபை



**(பூ.லின்ரன்)**

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட தம்பசிட்டி பிரதான வீதியில் இருந்து குறுக்காகச் செல்லும் – பதிவு செய்யப்படாத – வீதி ஒன்று பருத்தித்துறை நகர சபையின் தவிசாளரின் தன்னிச்சையான முடிவின் அடிப்படையில் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்களுக்கு தெரியாமல் கொங்கிறீட் போட்டு செப்பனிடப்பட்டுளாதாகத் தெரிவிக்கப்பசுகின்றது.

சுமார் 22 மீட்டர் கொங்கிறீட் வீதி சட்டத்திற்கு முரணாகவும் – பருத்தித்துறை பிரதேச சபையின் எந்த வித அனுமதியுமின்று பருத்தித்துறை நகரசபையின் தவிசாளரின் அனுமதிக்கமைவாக நேற்று முன்தினம் இரவு போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி உள்ளூராட்சிச் சட்ட வரம்பை மீறியே அமைக்கப்பட்டுள்ளது எனவும், இதனால் பருத்தித்துறை நகர சபை எல்லைக்குள் உட்பட்ட மக்களின் வரிப் பணம் வீணாகப் பயன்படுத்தபட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

இந்தக் கொங்கிறீட் வீதி அமைப்பால் அயலில் உள்ள வீடுகளுக்கு மழை காலங்களில் வெள்ள நீரோட்டங்கள் வருவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என்றும், அங்கு வாழும் மக்கள் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் மேலும் கூறப்படுகின்றது.





# கட்டைக்காடு கிழக்கில் தேடப்பட்டுவந்த 4 சந்தேக நபர்கள் நேற்றுச் சரணடைவு!





(மரியசீலன் திலைக்ஸ்)

கட்டைக்காட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் நால்வர் நேற்று மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி கட்டைக்காடு கிழக்கு பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது வன்முறை கும்பல் ஒன்று கொடூரமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இதன்போது வீட்டில் நின்ற டிராக்டர், வீட்டின் உடைமைகள், சிசிடிவி ஆகியவை பலத்த சேதமடைந்திருந்தன.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டதன் பிரகாரம் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு மருதங்கேணி பொலிஸார் பலமுறை முயற்சி செய்திருந்தார்கள்.

இந்தக் குற்றச்செயலில் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸெ நீண்ட நாள்களாகத் தேடி வந்த நிலையில் சந்தேக நபர்களில் நால்வர் நேற்று மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்கள்.

சரணடைந்தவர்களை இன்றையய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

# ரூ. 24 லட்சம் பெறுமதியான போதைப் பொருள்களுடன் இரு பிரபல வியாபாரிகள் காத்தான்குடியில் கைது!






(வாலகிருஸ்ணா)

சுமார் 24 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள்களுடன் இரண்டு போதை பொருள் வர்த்தகர்கள் காத்தான்குடி பொலிசாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 100 கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் ஹெரோயின் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து போதை பொருள்களைக் கடத்தி வந்து கல்லடியில் உள்ள விடுதியொன்றில் வைத்து விற்பனை செய்து வரும் இந்த நபர்கள் பிரபல போதை வியாபாரிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்லடியிலிருந்து சம்மாந்துறைக்கு இந்தப் போதைப் பொருள்களை எடுத்துச் சென்ற நிலையில் பொலிஸாரினால் இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருடள்களை கடத்துவதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாழைச்சேனையை சேர்ந்த 26 மற்றும் 29 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்



# அடம்பன் – ஆண்டாங்குளம் பிரதான வீதியில் கட்டுப்பாட்டை இழந்த கெப் வாகனம் விபத்து

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் – ஆண்டாங்குளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடைகளுக்கு விநியோகிப்பதற்காக வாழைக்குலைகளை ஏற்றி வந்த இந்த கெப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில், மரத்துடன் மோதி பின்னர் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி உள்ளது.

இதன் போது கெப் ரக வாகனத்தைச் செலுத்தி வந்தவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கெப் வாகனம் சேத மடைந்துள்ளதோடு, மோட்டார் சைக்கிலும் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கற்பிட்டி கல்குடா பிராந்திய வைத்தியசாலையில் பல் வைத்தியத்துக்கு என நடமாடும் பஸ் சேவை!






(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பாலகுடா கிராம சேவையாளர் பிரிவின் கல்குடா பிராந்திய வைத்திய சாலையில் மாதம் தோறும் முதலாம் மற்றும் மூன்றாவது செவ்வாய்க் கிழமைகளில் பல் சம்பந்தமான அனைத்து மருத்துவ சிகிச்சைகளுக்குமான நடமாடும் மருத்துவ பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

சிறந்த முறையில் இடம்பெற்று வரும் நடமாடும் பஸ் சிகிச்சையில் சிறந்த அனுபவம் வாய்ந்த பல் வைத்தியர்களால் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றமையால் கற்பிட்டி பிரதேச மக்கள் சிறந்த பயனை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத் தக்கது.





# வாகரையில் புலிகளின் வெடிபொருள்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள அம்பந்தனாவெளி சம்பு களப்பு வயல் பிரதேசத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த 38 ஆர் பிஜி குண்டுகள்,38 சார்ஜர்கள் மற்றும் ஐந்து கைக்குண்டுகளைநேற்றுசெவ்வாய்க்கிழமைவாகரை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வயலில் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்தவர் வயலைச் சுற்றி எல்லை வேலி அமைப்பதற்காக குழி தோண்டும் போது மர்மப் பொருள்கள் தென்படுவதை அவதானித்து வாகரை விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து வாழைச்சேனை மாவட்ட நீதிவானின் அனுமதியைப் பெற்ற விசேட அதிரடிப்படையினர் நேற்று கொட்டும் மழையில் திருகோணமலை மாவட்ட விசேட அதிரடிப் படை உதவி அத்தியட்சகர் ஏ.எம்.ஜி.சுஜிவ அத்தனாயக்க தலைமையில் வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனுஷ்க பண்டார, அம்பந்தனாவெளி கிராம சேவையாளர் சீ.கஜேந்திரன், வாகரை பிரதேச விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி அமில சிந்தக்க பிரேமரத்ன ஆகிய அதிகாரிகள் முன்னிலையில் தோண்டும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொலித்தீன் பைகளில் பொதி செய்து நுட்பமான முறையில் ஆழமான குழியில் புதைக்கப்பட்டிருந்த 38 ஆர்.பி.ஜி.குண்டுகள், 38 சார்ஜர்கள் மற்றும் ஐந்து கைக்குண்டுகளும் மீட்கப்பட்டன.

இந்தப் பகுதியில் கடந்த யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளின் மருத்துவ முகாம் அமைந்திருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# மடுல்சீமை – குருவிகல வீதிச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் மண்சரிவு ஏற்படும் அபாயநிலை





(பசறை நிருபர்: நடராஜா மலர்வேந்தன்)

மடுல்சீமையை பிட்டமாருவ, எக்கிரிய, லுணுகல உள்ளிட்ட முக்கிய பிரதேசங்களுடன் இணைக்கும் பிரதான வீதியின், குருவிகல சந்தி அருகிலுள்ள பகுதியில் தற்போதைய மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக பாரிய மண் சரிவு அபாயம் மற்றும் கற்கள் வீதிக்கு வீழும் ஆபத்து வழக்கமான பிரச்சினையாக உருவாகியுள்ளது.

இந்நிலைமை காரணமாக, ஆறு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுப் போக்குவரத்து பயணிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதி ஏற்கனவே அனர்த்த அபாயம் உள்ள பகுதி என அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், இதுவரை நிரந்தர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மனித உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பே உரிய அதிகாரிகள் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# முல்லைத்தீவில் வெளிச்சவீடு அமைக்கக் கோரும் ரவிகரன்

## இவ்வருடத்திற்குள் அமைக்க முயற்சி என உறுதி தெரிவிப்பு



**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவில் வெளிச்சவீடு இன்மையால் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கரைதிரும்புவதில் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர் எனத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வெளிச்ச வீடொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைப்பதுதொடர்பில் துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சருடன் தாம் பேசியுள்ளார் எனவும், இவ்வருடத்திற்குள் முல்லைத்தீவில் வெளிச்சவீட்டினை அமைப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுமெனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் பதில் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு கடற்கரைப்பகுதியில் கடந்த 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்ட வெளிச்சவீடொன்று காணப்பட்டது.

இந்த வெளிச்சவீட்டினால் முல்லைத் தீவு மாவட்டத்தின் 74 கிலோமீற்றர் தூரமான கரையோரத்தில் கொக்கிளாய் தொடக்கம் பேப்பாரப்பிட்டிவரையிலுள்ள மீனவர்கள் பயனடைந்தவந்தனர்.

இந்த வெளிச்சவீட்டின் உதவியுடனேயே மீனவர்கள் தொழிலுக்குச் சென்று தமது மீன்பிடித் துறைகளுக்கு கரைதிருப்பிவந்தனர்.

மீனவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகவிருந்த இந்த வெளிச்ச வீடு கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்துடன் முற்றாக அழிவடைந்துள்ளது.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மீனவர்கள் வெளிச்ச வீடின்றி பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எனவே மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையைக் கருத்தில்கொண்டு கடற்றொழில் அமைச்சு முல்லைத்தீவில் வெளிச்சவீடொன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென கடந்த 09.09.2025 அன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்திருந்தேன்.

இந்நிலையில் வெளிச்ச வீடுகளை அமைப்பதற்கு துறைமுக அதிகாரசபையே பொறுப்பெனவும், எனவே துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சருடன் கலந்துரையாடி முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரால் இதன்போது பதில் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய 05.01.2025 அன்று இடம்பெற்ற கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரிடம் இந்த வெளிச்சவீட்டினை அமைப்பது தொடர்பான முன்னேற்றம் குறித்து கேள்வி எழுப்பியிருந்தேன்.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சருடன் இதுதொடர்பில் தாம் பேசியுள்ளார் எனவும், நிச்சயமாக இவ்வருடத்திற்குள் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிச்சவீட்டை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமெனவும் கடற்றொழில் அமைச்சர் இதன்போது பதில் வழங்கியிருந்தார் – என்றார்.




# வடமராட்சி கிழக்குக் கடற் பகுதியில் இறந்து கரையொதுங்கும் ஆமைகள்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாள்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியில் சில ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடலின் சீற்றம் காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆமைகளைப் பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும் சட்டவிரோதமாகும். கரையொதுங்கிய ஆமைகள் கைவிடப்பட்ட நிலையில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையில் உருக்குலைந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.









# மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கான விசேட உணவு விநியோக திட்டம் ஆரம்பம்

அரசாங்க மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு போஷாக்கான மற்றும் விசேடமான உணவுகளை வழங்கும் புதிய முன்னோடித் திட்டம், முதன்முறையாக மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நோயாளிகளின் பசியைத் தூண்டும் வகையிலும், ஊட்டச்சத்து குறையாமலும் இருக்க விசேடமாக வடிவமைக்கப்பட்ட தட்டுகளில் உணவு வழங்கப்படுகின்றது.

இதன்படி சோறு, மரக்கறிகள், மீன், இறைச்சிமற்றும்முட்டைபோன்றஅனைத்தும் தனித்தனியாகப் பரிமாறப்படும்.

நோயாளிகளின் திருப்தியை அதிகரிப்பதுடன், தரமான உணவு மூலம் அவர்களின் விரைவான குணமடைதலை உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும் என சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



பழைய சமையலறை முறைக்கு பதிலாக “உணவு மற்றும் பானங்கள் திணைக்களம்“ என பெயரிடப்பட்ட நவீன சமையலறை வசதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வசதி மூலம் ஒரே நேரத்தில் 2,000 நோயாளிகளுக்கு உணவு தயாரிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள ஊழியர்களுக்கு நவீன உணவு தயாரிப்பு மற்றும் விநியோகத் தரங்கள் குறித்து விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தொற்றா நோய்களை கட்டுப்படுத்த புதிய தேசிய பணிக்குழு ஒன்று நிறுவப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதன்போது தெரிவித்தார்.

புற்றுநோய், இதய நோய், சிறுநீரக நோய், சுவாச நோய்கள் மற்றும் நீரிழிவு போன்ற நோய்களைத் தடுப்பதில் இது கவனம் செலுத்தும் என அவர் கூறினார்.







# கல்வி அமைச்சின் தவறுக்கு பிரதமர் ஹரிணி பொறுப்பு

## சாமர சம்பத் சபையில் தெரிவிப்பு



முன்னாள்சுகாதாரஅமைச்சர்கெஹெலிய ரம்புக்வெல்ல தவறான ஊசி மருந்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார் என்றால், தவறான கல்வி தொகுதியை அறிமுகப்படுத்தியதற்காகப் பிரதமர் ஹரிணி அமரசூரியவை எவ்வாறு காப்பாற்ற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

“அடுத்த விடயம் இந்த “மொடியூல்” பிரச்சினை. இந்த விவகாரத்தில் நாம் பிரதமரை அவமதிக்கவில்லை. இதில் உள்ள உண்மை என்னவென்றால், தவறு எங்கே நடந்தது என்பது மாத்திரமல்ல. இப்போது பாருங்கள், அந்தத் தவறை யார் செய்தது? ஊசிகளைச் செலுத்தியது யார்?

கெஹலிய ரம்புக்வெல்ல மருந்துகளைக் கொண்டு வந்தார் என்று வைத்துக் கொள்வோம். மருந்துகளைக் கொண்டு வந்தாலும், கெஹலிய ரம்புக்வெல்லவா அந்த ஊசியைப் போட்டார்? இல்லை, வைத்தியசாலையில்தான் அந்த ஊசி போடப்பட்டது.

ஆனால் இறுதியில் சிறைக்குச் சென்றது கெஹலிய ரம்புக்வெல்லதான். அதேபோல்தான், இந்த விவகாரத்திலும் பிரதமர் தனது பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாது.

உதாரணமாக, கடந்த காலங்களில் மாகாண சபையின் வைப்புத் தொகையை காலத்திற்கு முன்பே மீளப் பெற்றதாகக் கூறி நான் சிறைக்கு அனுப்பப்பட்டேன்.

உண்மையில் அந்தப் பணத்தை மீளப் பெற்றவர்கள் தலைமைச் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆவர்.

ஆனால் சிறைக்குச் சென்றது நான்தான். அதேபோல்தான் பிரதமரும் இதிலிருந்து தப்பிக்க முடியாது.

கெஹலிய ரம்புக்வெல்லவுக்கும் சாமர சம்பத்திற்கும் தண்டனை வழங்கப்பட்டது என்றால், அதே முறையில் பிரதமருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இல்லையெனில், இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.” என்றார்.

# எரிபொருள் விலையேற்றத்தைப் போல் மின்சாரக் கட்டணமும் உயர்வடையும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு




மக்கள் ஏற்கனவே இயற்கை அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், எரிபொருள் விலையை உயர்த்தியுள்ள அரசாங்கம், தற்போது மின்சார கட்டணத்தையும் உயர்த்த முன்வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உநேற்று ரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஆட்சியைப் பொறுப்பேற்று 3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 வீதம் குறைக்கப் போவதாகக் கூறிய அரசாங்கம், இன்று அதற்கு முரணாக செயற்படுகின்றது.

எரிபொருளுக்குப் பதிலாக சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின்சாரம் போன்ற மலிவான புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதாக அளித்த வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை தனது நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 11.57 வீதம் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளது.

இந்த அதிகரிப்பு குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா?

புதிய எரிசக்தி கொள்கை குறித்து பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக வழங்கப்பட்டுள்ள காலம் போதுமானதல்ல. நாடு நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நிலையில் அந்த கால அவகாசம் நீட்டிக்கப்பட வேண்டும்.

பாரிய அளவிலான மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான போட்டித்தன்மை வாய்ந்த கட்டண முறைகளை நீக்குவது அநீதியானது.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்து வரும் போதிலும், அரசாங்கம் எரிபொருள் விலையை மீண்டும் அதிகரித்துள்ளது.” – என்றார்.



# எரிபொருள் விலை அதிகரித்தாலும் பஸ் கட்டணங்களில் மாற்றம் இல்லை

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும், பஸ் கட்டணங்கள் மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்து வான் கட்டணங்களை உயர்த்துவதில்லை என போக்குவரத்து சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலைத் திருத்தத்தை மேற்கொண்டது.

எனினும், அதிகம் பயன்படுத்தப்படும் ஒக்டேன் 92 ரக பெட்ரோல் விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து கருத்து தெரிவித்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, தற்போதைய விலை அதிகரிப்பானது பேருந்து கட்டணங்களை உயர்த்தும் அளவுக்கு பாரிய தாக்கம் செலுத்தவில்லை என்பதால், கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

அதேபோல், அகில இலங்கை மாகாணங்களுக்கிடையிலான பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் கருத்து தெரிவிக்கையில், மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு பாடசாலை வான் கட்டணங்களை உயர்த்துவதில்லை என முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

# தொழிற்சங்கப் போராட்டம் குறித்து தீர்மானிக்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசரக் கூட்டம்

சுகாதாரத் துறையில் நிலவும் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வ உடன்படிக்கைகளை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்த அடுத்தகட்ட தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இன்று விசேட மத்திய குழுக் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்ட பல முக்கிய கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக DAT கொடுப்பனவை உரிய முறையில் இற்றைப்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான 22/99 சுற்றுநிருபப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், மேலதிக கடமை நேரக் கொடுப்பனவை நிரந்தரப் பலனாக மாற்றுதல், மருத்துவத் துறைக்கெனத் தனியான ‘இலங்கை மருத்துவ சேவையை” நிறுவுதல் போன்ற வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நிதியமைச்சுடன் ஆரம்பிக்கப்படவிருந்தபேச்சுவார்த்தைகள்,சுகாதாரஅமைச்சின் மெத்தனப்போக்கினால் தடைப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட உடன்படிக்கைகளை அரசாங்கம் மீறியுள்ளமை நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலவச சுகாதார சேவையைப் பாதுகாப்பது தேசியப் பொறுப்பாகும் என வலியுறுத்தியுள்ள மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருந்து தட்டுப்பாடு மற்றும் மனிதவளப் பற்றாக்குறை போன்ற தீவிரமடைந்து வரும் கட்டமைப்புச் சிக்கல்கள் குறித்து அரசாங்கம் மௌனம் காப்பதாகச் சாடியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள மத்திய குழுக் கூட்டத்தின் போது, அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியிலான தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பதா அல்லது மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

பொலிஸ் மற்றும் ஏனைய அத்தியாவசியத் துறையினரைப் போலவே மருத்துவத் துறையினரின் உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும் என அந்தச் சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது.



# பருத்தித்துறை நகரில் லஞ்ச் சீற் தடை முழுமையாக நடைமுறைக்கு வந்தது

பருத்தித்துறை நகரில் உள்ள உணவகங்களில் "லஞ்ச் சீற்" பாவனை தடை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகள் மூலம் இம்முன்மாதிரியான செயற்பாட்டினை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ளக மற்றும் பொதியிடல் பயன்பாடுகளில் "லஞ்ச் சீற்" பாவனை கடந்த 01 ஆம் திகதி முதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களுக்கு நேற்று முன்தினம் திங்கள் இரவு நேரில் விஜயம் செய்து ஆய்வு மேற்கொண்டனர்.

இதன் போது சகல உணவகங்களிலும் லஞ்ச் பாவனை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அத்துடன், உள்ளக பயன்பாட்டில் வாழை இலையும் உணவு பொதியிடலுக்கு உணவு தரக்கட்டுப்பாட்டு பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கலன்கள், தாள்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த விடயம் தொடர்பில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பில் உணவக உரிமையாளர்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன் மாற்றீடான பொருள்களை பெற்றுக்கொள்வது தொடர்பான ஆலோசனைகளும் தவிசாளர் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகரினால் வழங்கப்பட்டிருந்தது.









# கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பில் நடிகர் விஜய்க்கு சி.பி.ஐ. அழைப்பாணை!



கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக நடிகரும் தமிழக வெற்றிக் கழகக் கட்சியின் தலைவருமான விஜயை எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி முன்னிலையாகுமாறு மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கரூர் மாவட்டம் வேலுசுவாமிபுரத்தில் 2025 செப்டம்பர் 27 அன்று நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பேரணியின் போது கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

விஜயை காண்பதற்கும், அவரது அரசியல் உரையினை கேட்பதற்கும் மணிக்கணக்காக அதிகளவிலானோர் ஒன்று திரண்டதனால் இந்த நிலை ஏற்பட்டது.

இந்த நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

இந்த துயர சம்பவம் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக, சி.பி.ஐ. முன்னதாக த.வெ.க. உயர் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பி அறிக்கைகளைப் பதிவு செய்துள்ளது.

இந்த நிலையில் நடிகர் விஜய்க்கு மேற்கண்ட அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்துவதை தமிழக அரசு எதிர்த்தது, அதற்கு பதிலாக வழக்கை விசாரிக்க ஒரு சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்தது.

சட்டம் ஒழுங்கு மாநிலப் பிரச்சினை என்பதால், இந்த சம்பவத்தை விசாரிக்க ஒரு சிறப்பு புலனாய்வு குழு போதுமானது என்று அரசு நீதிமன்றத்தில் வாதிட்டது.

எனினும், கரூர் கூட்ட நெரிசல் "தேசிய மனசாட்சியை உலுக்கியதாக" குறிப்பிட்டு, சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்தரவாதம் அளித்த உயர் நீதிமன்றம், விசாரணையை சி.பி.ஐக்கு மாற்றியது.

சிறப்பு விசாரணைக் குழுவைத் தொடர வேண்டும்என்றஅரசின்வேண்டுகோளை உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்து, மத்திய நிறுவனம் விசாரணையை மேற்கொள்ள அனுமதித்தது.

வழக்கினை பொறுப்பேற்றதிலிருந்து சி.பி.ஐ., நிகழ்வுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள், கூட்ட மேலாண்மை நடவடிக்கைகள், காவல்துறையினர் பணியமர்த்தல் மற்றும் அவசரகால நடவடிக்கை ஆகியவற்றை ஆய்வு செய்து வருகிறது.

அதே நேரத்தில் டிவிகே நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்களையும் பதிவு செய்து வருகிறது.

இந்த வழக்கில் விசாரணை ஆணையத்தின் முன்னதாக முன்னிலையானவர்களில் த.வெ.க. மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர்கள் நிர்மல் குமார் மற்றும் ஆதவ் அர்ஜுன், கரூர்மேற்குமாவட்டசெயலாளர் மதியழகன் ஆகியோர் அடங்குவர்.

# இந்தியாவின் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் சோனியா காந்தி வைத்தியசாலையில் அனுமதி

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி உடல் நலக்குறைவால், புது டில்லியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா நேற்று டில்லியில் உள்ள கங்கா ராம் மருத்துவமனைக்கு உடல்நலக் குறைவு காரணமாக அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

அவர் வழமையான பரிசோனைக்கு அழைத்து செல்லப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் பரிசோதித்த வைத்தியர்கள் , மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து , மருத்துவமனையில் சோனியா காந்தி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



வைத்தியர்களின் தீவிர கண்காணிப்பில் சோனியா காந்தி இருக்கிறார் எனவும் உடல் நலத்தில் பெரிய சிக்கல் ஏதும் இல்லை என்றும் சிகிச்சைக்கு பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# திருப்பரங்குன்றம் மலைக்கோயிலில் தீபம் ஏற்றுவதற்கு நீதிமன்றம் அனுமதி

தீபத் திருநாளின் போது தமிழகத்தின் திருப்பரங்குன்றம் மலைக்கோயிலில் சடங்கு தீபம் ஏற்ற அனுமதி அளித்து தனி நீதிபதி பிறப்பித்த தீர்ப்பை சென்னை மேல் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை நேற்று உறுதி செய்தது.

நீதிபதிகளான ஜி. ஜெயச்சந்திரன் மற்றும் நீதிபதி கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு, மதுரை மாவட்ட நிர்வாகம், அறநிலையத் துறை, சிக்கந்தர் தர்கா நிர்வாகம் உட்பட 26 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் அனைத்தையும் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு 5 ஆவது நாளாக விசாரித்தது.

வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில், நேற்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.


அதன்படி, தமிழக அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தனி நீதிபதி ஜிஆர் சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்றும் திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தூணில் தீபம் ஏற்றலாம் எனவும் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

மேலும் நீதிபதிகள் உத்தரவில், "அரசியல் காரணங்களை அடிப்படையாக கொண்டு அரசு செயல்படக் கூடாது. பொது அமைதிக்கு பிரச்சினை ஏற்படும் என்று அரசு காரணம் காட்டுவது ஏற்புடையது அல்ல.

மலையில் உள்ள தீபத்தூண் தேவஸ்தானத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ளது. தூணில் தீபம் ஏற்றும் போது பொது மக்களை அனுமதிக்கக் கூடாது." என்று தெரிவித்தனர்.









# அமெரிக்க உப ஜனாதிபதி வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு!

அமெரிக்க உப ஜனாதிபதி ஜே.டி. வான்சின், ஓஹியோ மாகாணம் சின்சினாட்டியில் உள்ள வீட்டில், மர்ம நபர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஒருவரை கைதுசெய்துள்ள அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்க உப ஜனாதிபதி ஜே.டி. வான்சின், சின்சினாட்டியில் உள்ள வீட்டுக்கு அருகே, மர்ம நபர் ஒருவர் நடமாடம் இருப்பதாக உளவுத் துறையினர் எச்சரித்தனர்.

இதன்படி, உள்ளூர் பொலிஸார் அங்கு சென்றபோது, சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் இருந்த ஒருவரைப் கைது செய்தனர்.

வான்சின் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால், இதை பொலிஸார் உறுதி செய்யவில்லை.

இந்த சம்பவம் நடந்த நேரத்தில், வான்ஸ் மற்றும் அவருடைய குடும்பத்தார் அந்த வீட்டில் இல்லை எனவும் வான்சின் வீட்டுக்குள் நுழையாமலேயே, வெளியில்இருந்துதாக்கப்பட்டதாகவும்யார்,எதற்காக இந்த தாக்குதல் நடத்தினர் என்பது தொடர்பாக விசாரணை நடைபெறுவதாகவும் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# தாய் நாட்டிற்காக மீண்டும் ஆயுதம் ஏந்துவேன்: ட்ரம்பிற்கு கொலம்பிய ஜனாதிபதி அதிரடி சவால்





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நேரடி அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, தனது தாய்நாட்டின் இறையாண்மையைக் காக்க மீண்டும் ஆயுதங்களை ஏந்தத் தயார் என கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ அதிரடியாக அறிவித்துள்ளார்.

சமீபத்தில் வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவினால்கைதுசெய்யப்பட்டதைஅடுத்து, கொலம்பியாவிற்கும் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

“கொலம்பிய ஜனாதிபதி பெட்ரோ ஒரு நோய் வாய்ப்பட்டவர், அமெரிக்காவிற்கு கொகேய்ன் கடத்துவதையே அவர் விரும்புகிறார்” என ட்ரம்ப் தனிப்பட்ட ரீதியில் விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், ட்ரம்பின் இந்தக் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஜனாதிபதி பெட்ரோ பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“நான் மீண்டும் ஆயுதம் ஏந்த மாட்டேன் என ஏற்கனவே சபதம் செய்திருந்தேன். ஆனால், தாய்நாட்டிற்காக அந்தச் சபதத்தை முறித்து மீண்டும் ஆயுதம் ஏந்தவும் தயங்கமாட்டேன்.

நான் போதைப்பொருள் கடத்தல்காரன் அல்ல. எனது ஒரே சொத்து எனது குடும்ப வீடுதான். அதற்கான தவணையை இன்னும் எனது சம்பளத்திலிருந்தே செலுத்தி வருகிறேன். எனது வங்கிக் கணக்கு விபரங்கள் வெளிப்படையானவை.

என்னைச் சட்டவிரோதமாகக் கைது செய்ய முயன்றால், எனது மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள். அமெரிக்காவுக்கும் கொலம்பியாவுக்கும் இடையிலான உறவை முறிக்க ட்ரம்ப் முயல்கிறார். லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை ஒரு சட்டவிரோத அச்சுறுத்தல்” என பெட்ரோ வர்ணித்துள்ளார்.

மதுரோவின் கைதைத் தொடர்ந்து கொலம்பிய ஜனாதிபதியின் இந்த ஆவேசமான அறிக்கை சர்வதேச அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# எனது நோபல் பரிசு ட்ரம்ப்புக்கே உரித்தானது: வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் புகழாரம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமைதிக்கான நோபல் பரிசு பெறுவதற்கு முழுத் தகுதியுடையவர் என வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவரும் நோபல் பரிசு பெற்றவருமான மரியா கரினா மச்சாடோ தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெனிசுலாவில் ஜனநாயகம் மலரவும், நிக்கோலஸ் மதுரோவின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்த நடவடிக்கைகள் மனிதநேயத்திற்கான ஒரு மிகப்பெரிய மைல்கல் என்று மரியா கரினா மச்சாடோ பாராட்டினார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு தான் வென்ற அமைதிக்கான நோபல் பரிசை ட்ரம்ப்புடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

“ட்ரம்ப் செய்துள்ள காரியங்கள் உலகிற்கு ஒரு வலுவான செய்தியைச் சொல்லியுள்ளன. அவர் இந்தப் பரிசைப் பெறுவதற்கு முழு உரிமையுடையவர் என்பதை அவரது செயல்கள் நிரூபித்துள்ளன,” என்றார்.

வெனிசுலா மக்கள் சார்பாக ட்ரம்ப்பின் துணிச்சலான முடிவுகளுக்குத் தான் எப்போதும் நன்றிக்கடன் பட்டிருப்பதாக அவர் உருக்கமாகக் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ட்ரம்ப்பின் தனிப்பட்ட தலையீடு காரணமாகவே வெனிசுலாவில் நீண்டகாலமாக நிலவி வந்த அரசியல் சர்வாதிகார ஆட்சி வீழ்த்தப்பட்டதாக மரியா கரினா மச்சாடோ இந்த நேர்காணலில் வலியுறுத்தினார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2025




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.01.2025




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மன நிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.



## 850 கிலோவிற்கு அதிகமான சுறா மீன்களுடன்
# ஆறு மீனவர்கள் வென்னப்புவவில் கைது

(உடப்பு நிருபர்: க.மகாதேவன்)

சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 850 கிலோ கிராமிற்கும் அதிகமான சுறா மீன்களுடன் ஆறு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ, வெல்லமன்கர மீன் பிடித் துறைமுகத்தில் நேற்று அதிகாலை இலங்கை கடலோர பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, நெடுநாள் மீன் பிடிப் படகொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த சுறா மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடலோரப் பாதுகாப்புப் படை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட சுறா மீன்கள் மற்றும் மீன்பிடிப் படகு ஆகியவற்றுடன் சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக வெல்லமன்கர மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.